Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 4 திங்கட்கிழமை (17-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 110

# வானத்தில் 'புக்காரா' வெடித்துச் சிதறியது!

## பொலன்னறுவையில் சனி இரவு சம்பவம்

கொழும்பு, மார்ச் 17

**ஸ்ரீலங்கா விமானப்படையின் -- தரைத் தாக்குதலுக்கான -- 'புக்காரா' ஜெட் விமானம் ஒன்று பத்தாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது நடுவானில் வெடித்துச் சிதறியது; எனினும் விமானி உயிர் தப்பினார்.**

**நேற்று முன்தினம் - சனிக்கிழமை - இரவு 10 மணியளவில் பொலன்னறுவைப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.**

வானத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தபோது திடீரெனப் பெரும் வெடிச் சத்தம் கேட்டதாகவும் —

விமானம் ஒளிப்பிழம்பாகி வெடித்துச் சிதறியதாகவும் —

சம்பவத்தை நேரில் கண்ட — பொலன்னறுவைக்கு அப்பால் ஹத்தரஸ் கொட்டுவ இராணுவ முகாமைச் சேர்ந்த — படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட விமானத்தின் விமானியான உதயராஜபக்ஸ இருக்கையுடன் தூக்கி வீசும் விசையை அழுத்தி, 'பாரசூட்' உதவியுடன் தரையிறங்கித் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை இழந்த 2 ஆவது புக்காரா இது!

நேற்று முன்தினம் வீழ்ந்து நொறுங்கிய 'புக்காரா' ஜெட் விமானத்துடன் கடந்த இரண்டு வருடங்களில் 14வான் கலங்களை ஸ்ரீலங்கா விமானப்படை இழந்திருக்கின்றது.

1995 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி —'முன்னேறிப் பாய்தல்' படை நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த முயன்ற 'புக்காரா' ஜெட் விமானம் ஒன்று புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது தெரிந்ததே.

தற்போது விமானப்படை இரண்டாவது புக்காரா விமானத்தை இழந்திருக்கின்றது.

1995 ஏப்ரல் 28ஆம் திகதிக்குப் பின்னர் இதுவரை இரண்டு புக்காரா ஜெட்டுகள், இரண்டு அவ்ரோக்கள், மூன்று அன்ரனோக்கள், ''வை — 8'' ரக விமானம் ஒன்று, ''வை — 12'' ரக விமானங்கள் இரண்டு, எம். ஐ — 17 ரக ஹெலி ஒன்று, பெல் — 212 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று, கிபிர் ஜெட் விமானம் ஒன்று, ஆளில்லா தானியங்கி உளவு விமானம் ஒன்று ஆகியவற்றை விமானப்படை இழந்திருக்கின்றது. (உ)

# முஸ்லிம் கட்சிகளின் தொண்டர்கள் மோதல்!

## 20 பேர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் பலர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்களால் நையப்புடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் காயப்பட்ட தமது கட்சித் தொண்டர்கள் இருபது பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

முகத்துவாரம் பொலீஸார் மேல் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ-3)

# ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தால் அக்கட்சியை ஆதரிப்பேன்!

## தொண்டா கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 17

''அடுத்த பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வருமானால் நான் ஐ. தே. கவை ஆதரிப்பேன்'' — என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக அங்கம் வகிப்பவரும், இ. தொ. கா. தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்திருக்கின்றார்.

அண்மையில் மாத்தளையில் நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

''எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆட்சிக்கு வரும் அரசுகளுடன் நாம் இணைந்துதான் செயல்படவேண்டும்.

''விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் போன்று உரிமைக்காக நாம் ஆயுதம் ஏந்திப் போராட முடியாது.

''பிரபாகரனுக்கு உள்ள திறமை, தகுதி எனக்கு இல்லை. நாம் தனித்து நின்று போராடி உரிமை பெறமுடியாது. எந்தக் கட்சியையும் சார்ந்து நின்றே எமது உரிமையைப் பெற முடியும்'' — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-3-150)

## உள்ளூராட்சி சபைகளுக்கு

# வடக்கு, கிழக்கில் தேர்தல் ஜூலை 7இல்!

கொழும்பு, மார்ச் 17

வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தேர்தல்களை எதிர் வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கான புதிய வர்த்தமானி அறிவித்தல் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகள் மற்றும் வவுனியா நகர சபை ஆகியவை தவிர்ந்த—வடக்கு கிழக்கில் உள்ள — ஏனைய அனைத்து உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல்கள் ஜனவரி 7 ஆம் திகதி நடைபெறும் எனக் கடந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலில்

# பொ. ஐ. மு. வென்றால் அமைச்சரவை மாற்றம்!

## திடீர் பொதுத் தேர்தலும் வரலாம்

கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு கணிசமான வெற்றி கிட்டினால் உடனடியாக அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறும்; நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டு திடீர் பொதுத் தேர்தலும் நடத்தப்படலாம்.

— கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இவ்வாறு தகவல் வெளியிட்டன.

அமைச்சரவை மாற்றம் இடம்பெறும்போது —

போக்குவரத்து, மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலியிடமிருந்து அமைச்சர் பதவி பறிக்கப்படுவது நிச்சயம் எனத் தெரிகின்றது.

இதற்கு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக ஸ்ரீமானிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கடிதம் ஒன்றை அனுப்பவிருக்கின்றது.

தற்போது நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது எந்த அணியையும் ஆதரிப்பதில்லை என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றுள்ள — ஸ்ரீமானி அத்துலத்முதலியின் — புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்து அறிவித்திருப்பது தெரிந்ததே.

எனினும் —

தெகிவளை மாநகரசபை, கோட்டே மாநகரசபை ஆகியவற்றுக்கான தேர்தல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் மோதல்!

கொழும்பு, மார்ச் 17

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடந்த மோதல் ஒன்றில் பொலீஸ்காரர் ஒருவரும், சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டனர். பெண் ஒருவர் காயமடைந்தார். (உ-3)

## மதயானை தாக்கி 2 பேர் மரணம்

கொழும்பு, மார்ச் 17

பொலன்னறுவை வஸ்கொட பூங்காவில் நேற்றுக் காலை மதம்பிடித்த யானை ஒன்று கூட்டத்துக்குள் புகுந்து தாக்கியதில் பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்.

இந்த யானை புரிந்த அட்டகாசத்தால் உடைமைகள் பலவும் சேதமடைந்தன. (உ-3)

## முச்சந்தி முரளி



அப்ப......எப்பவும் அமைச்சர் எண்டதுதான் உவர் தொண்டாவின்ரைகொள்கை எண்டு சொல்லுங்கோ......!

# பாஸ்கரலிங்கம் உட்பட மூவரின் குடியுரிமையைப் பறிப்பது கஷ்டம்

கொழும்பு, மார்ச் 17

முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் ஆகியோர் உட்பட மூவரின் குடியுரிமைகளைப் பறிக்க வேண்டும் என விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சிபாரிசு செய்திருந்தாலும் கூட —

அத்தண்டனையை அவர்களுக்கு அரசினால் விதிக்க முடியாது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று இவ்வாறு குடியுரிமையைப் பறிக்குமாறு சிபாரிசு செய்தாலும் —

அரசமைப்பின் 81 (i) ஆம் பிரிவின்படி —

அது தொடர்பான விசேட பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே குடியுரிமையைப் பறிக்கும் தண்டனை சட்டபூர்வமாக செல்லுபடியாகும்.

தற்போதைய நிலையில் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த — ஆகக் குறைந்தது — 13 எம்.பிக்களின் ஆதரவின்றி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை அரசாங்கத்தால் பெறமுடியாது என்பது கண்கூடு.

ஐ. தே. கட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் ஊழல்கள், மோசடிகள் தொடர்பான விடயங்களுக்கு தண்டனை வழங்கும் ஒரு பிரேரணையை ஐ. தே. கவினர் ஆதரிக்க மாட்டார்கள் என்பதும் ஓரளவு நிச்சயம்.

எனவே பாஸ்கரலிங்கம், விஜேபால மெண்டிஸ் உட்பட மூவருக்கு எதிரான

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது தாக்குதல் தந்திரோபாயத்தை புலிகள் மாற்றியமைத்துள்ளனர்

## அதற்கேற்ப படையினர் உத்தியும் மாற வேண்டும்

கொழும்பு, மார்ச் 17
சீனக்குடா விமானத்தளம், வவுணதீவு இராணுவ முகாம் ஆகியவற்றின் மீது அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களை நோக்கும் போது புலிகள் தமது யுத்த தந்திரோபாயங்களை மாற்றி விட்டார்கள் என்பது தெளிவாகியுள்ளது. புலிகள் வகுத்துள்ள தந்திரோபாய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் படையினர் தமது யுத்த உத்திகளை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அப்படி மாற்றியமைத்தால்தான் படையினர் தமக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தவிர்க்க முடியும்.

'சண்டே லீடர்' பத்திரிகை இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றது.

முகாமுக்குள் ஊடுருவ முன்னர் மூன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தே புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தத் தொடங்கி விடுகிறார்கள்.

அதன் பின்பே புலிகள் முகாமுக்குள் ஊடுருவுகிறார்கள்.

மூன்றரைக் கிலோ மீற்றர் தூர வீச்சு ஆயுதங்கள் அவர்களிடம் உள்ளதால், அதற்கு ஏற்றவாறான பாதுகாப்புக்களுடன் முகாம்களை அமைக்க வேண்டிய நிலைக்கு படையினர் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் தினமும் முன்னணிக் காவலரண் பகுதிகளைத் துப்புரவு செய்ய வேண்டிய நிலையும் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

வவுணதீவு முகாம் தாக்குதலின் பின்னர் புலிகளின் வானொலித் தகவல்களைக் கூர்ந்து கவனித்து — புலிகளின் நடமாட்டத்தையும், அவர்களின் உத்திகளையும் கண்காணித்து — செயற்பட வேண்டிய நிலை படையினருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கில் வாகரை, ஆயித்தியமலை, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் பெருமளவில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கிடைக்கும் தகவலை நோக்கும் போது பாரிய தாக்குதல் ஒன்றுக்கு அவர்கள் தயாராவது போல் தெரிகின்றது என பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகள் அலை அலையாக வந்து தாக்குதல் நடத்துவதால், அதற்குப் படையினர் நின்று தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் படையினர் ஒன்றில் முகாமை விட்டுச் செல்ல வேண்டும்; அல்லது பெருமளவில் சாக வேண்டிய நிலை ஏற்படும்.

விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலைத் தீவிரமாக்கியுள்ளனர். விடுதலைப் புலிகள் அடுத்த முகாமைத் தாக்க முன்னர் படையினர் தமது இராணுவ உத்திகளை மாற்றியமைக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இராணுவ உத்திகளைப் படையினர் மாற்றுவதன் மூலமே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியும். அதன் மூலமே உயிரிழப்பையும் தவிர்க்க முடியும்.

- இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-3-150)

## இலங்கை மீனவர் இந்தியாவில் கைது!

கொழும்பு, மார்ச் 17
இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் மீன்பிடிப் படகுடன் இராமநாதபுரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீர்கொழும்பில் இருந்து மீன்பிடிக்கச்சென்ற இந்த மீனவர்கள் இந்திய பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3-150)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 17
காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களில், பட்டியல் இலக்கம் 545க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

## பரஸ்பர குற்றச்சாட்டு

ஐ. தே. க. வின் எம்.பியான அனுரா பண்டாரநாயக்காவின் மெய்ப்பாதுகாவலர்கள் வியாங்கொடையில் வைத்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களை அச்சுறுத்தினார்கள் என்று பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம்—

இன்று நடைபெறவுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பொதுக் கூட்டத்திற்கான விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதில் ஈடுபட்டிருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களை அனுரா பண்டாரநாயக்க ஏசியதாக மற்றொரு முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

(உ-5)


## வெற்றிக்கு வாழ்த்துக்கள்

### நடராசா குகதாசன் (FIT)
### (மருத்துவ பீடம்)

உயர்ந்திருந்தீர் உதவி செய்
உயர் உள்ளத்தால்
உழைத்தீர் எம் வளாக
உயர்விற்காய்
உயர்கின்றீர் நீர் பெறும்
பரீட்சைப் பெறுபேற்றால்
விரைந்து வாரீர் நல்
வைத்தியனாய் எம் மண்ணுக்கே.

நன்றிகள்!

சக நண்பர்கள்

(45846)


# மரண அறிவித்தல்கள்

## அப்பச்சி மகாலிங்கம்

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்பச்சி மகாலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய மகா வித்தியாலயம்) 15-03-97 அன்று சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-03-97 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
மனைவி

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(45847)

## திருமதி செல்லத்துரை மேரி திரேசா

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் வீதியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை மேரி திரேசா (திரேஸ் அக்கா) 16-03-97 இல் காலமாகிவிட்டார்.

இவர் பேலேந்திரன் செல்லத்துரையின் அன்பு மனைவியும், ஜசிந்தா (கொழும்பு), அலோசியஸ் (டோகா), நெமிசியஸ் (குமாரி, டோகா), தர்மரெட்னம் (செல்வம், டோகா), ஆன் லூசியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், முத்துக்குமார் (கொழும்பு), சகாயராணி (வன்னி), றூபி, புவனா, கிறேசியன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பிரகாசியம்மா, அந்தோனிப்பிள்ளை றெஜீனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிறிஜா, நிரஜா, ஜீவன், சுரேகா, ரதி, ஜெகன், சசி, தீபன், சுதன், சுமன், சுமிதா, சபிதா, சௌமியா, சுரேன், தீபா, திலக், திலீப், சலுஜா, ஜெறோஜா, நிந்துஜா, றொக்கின்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 36/4, புனித பத்திரிசியார் வீதியிலிருந்து இன்று (17-03-97) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்) நல்லடக்கத்திற்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஞா. கிறேசியன்
(மருமகன்)

36/4, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(45850)

## திருமதி சின்னையா செல்லம்மா

தையிட்டியைச் சேர்ந்த திருமதி சின்னையா செல்லம்மா 16-03-1997 அன்று காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (17-03-1997) காலை 10-00 மணிக்கு 'பவளவில்லா', காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சண்முகலிங்கம் (மகன்)

(45842)

## குழந்தைவேலு இராசரத்தினம்

மடத்தடி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கு. இராசரத்தினம் அவர்கள் 14-03-1997 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணத்தின் அன்புக் கணவரும், குகபாலன் (பிரான்ஸ்), மகாதேவன் (சிவன்), கலாஜினி, பரந்தாமன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினிதேவி (பிரான்ஸ்), சத்தீஸ்வரி (ஆசிரியை, யா/ பொன். பரமானந்த ம. வி., குரும்பசிட்டி), சோமசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், அன்னப்பிள்ளை, மனோன்மணி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் சகோதரரும், அனுராஜ், றாஜீசன், குகாஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-03-97 அன்று கொழும்பில் நடைபெற்றன.

அம்பலவாணர் வீதி, உடுவிலில் உள்ள மகனின் இல்லத்தில் இன்று (17-03-1997) துக்கம் அனுஷ்டிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. மகாதேவன் (சிவன்)
(மகன்)

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(45841)


## பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்

25, றக்காவீதி, யாழ்ப்பாணம்.

**A/L 96, 97**
**Paper Classes**

விலங்கியல்:
திரு. யதுனந்தன்
பௌதிகவியல்:
திரு. ஸ்பெல்மன்
ஆரம்பம்:- 18 - 03 - 97
பி. ப. 3 மணி

ஆண்டு 7 முதல் O/L வரை
வகுப்புகள் நடைபெறுகின்றன.

(45829)

## தேவை

அச்சுக்கோர்ப்பாளர், பைண்டிங் பழகிய - பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு:

திருவள்ளுவர் அச்சகம்
இல. 593, பருத்தித்துறைவீதி,
(யாழ். மாநகரசபை அருகில்)
நல்லூர். (45820)

உ
அம்பாள் துணை

மட்டுவில்
## பன்றித்தலைச்சி கண்ணகைஅம்மன் கோயில்
## பங்குனித் திங்கள் உற்சவம்

17, 24, 31 — 3- 1997, 7-4-1997 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை பூசை, வழிபாடு, உற்சவம் என்பன நடைபெறும்.

கடைகள் யாவும் ஆலய வடக்கு வீதிக்கு அப்பால் உள்ள வளவில் தர்மபரிபாலன சபையால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் அமைக்கப்படும்.

வண்டில்கள், துவிச்சக்கர வண்டிகளில் கொண்டு திரிந்து எப்பொருளும் விற்றல் தடைசெய்யப்பட்டுள்ளது.

திரு. சி. சிவகுரு,
தர்மகர்த்தா,
(45844) தர்மபரிபாலனசபை.

## 1997 A/L கலைப் பிரிவு தமிழ் கற்கும் மாணவருக்கு ஒரு நற்செய்தி!

செல்வி சுசிலா சாரங்கபாணி B. A தமிழ் சிறப்பு Dip. in Edu. உடன் 20 வருடமாக A/L தமிழ் கற்பித்தல் அனுபவமும், 10 ஆண்டுகள் A/L தமிழ் விடைத்தாள் திருத்திய அனுபவமும் உடைய நான் சித்திரை விடுமுறையில் தமிழ் வகுப்புக்கள் வைப்பதற்கு எண்ணியுள்ளேன். குடாநாட்டில் உள்ள மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

**இலவசம்**

விரும்புபவர்கள் பெயர்களை என்னுடன் நேரில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்.

எனது முகவரி:-
M.s சுசிலா சாரங்கபாணி,
'சாரங்கம்',
உரும்பிராய் தெற்கு (சந்திக்கு அருகில்),
உரும்பிராய். (45845)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் இனிநூலகம்.

# ஸயரின் கிசங்கானி நகர் கிளர்ச்சியாளரிடம் வீழ்ச்சி!

## தளத்தைக் கைவிட்டு அரச படைகள் ஓட்டம்!

கிசங்கானி, மார்ச் 17

கிழக்கு ஸயரில் கிசங்கானி நகர சர்வதேச விமானத் தளத்தை கிளர்ச்சிப்படைகள் கைப் பற்றி விட்டதாக அந்த நகரில் உள்ள வெளி நாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உறுதிப் படுத்தியுள்ளனர். ஸயர் நாட்டு இராணுவத் தலைமையகமும் அங்கேயே அமைந்திருந்தது.

அதிபர் முபுட்டோவின் ஆட்சியைக்கவிழ்ப் பதற்காக ஸயரில் இடம்பெற்று வரும் உள் நாட்டுக் கிளர்ச்சி தீவிரமடைந்திருக்கிறது.

கிசங்கானி நகரின் அருகே உள்ள இந்த சர்வதேச விமான நிலையத்தில் இராணுவத் தின் தலைமையகம் அமைந்திருந்தது.

இந்த விமான நிலையத்துக்கு அருகே கடந்த வெள்ளியன்று கடும் பீரங்கிச் சமர் மூண்டது.

ஸயர் நாட்டு இராணுவத்தினருடன் சேர்ந்து போரிடும் சேர்வ் நாட்டு கூலிப்படை கள் கிசங்கானி விமான நிலையத்தில் அமைந் திருந்த தங்களது தளத்தைக் கைவிட்டுவிட்டு பின்வாங்கி ஓடித்தப்பியுள்ளன.

கிசங்கானி விமான நிலையம் கிளர்ச்சி யாளர் வசம் வீழ்ந்து விட்ட நிலையிலும் நக ரின் மத்திய பகுதிக்குள் அவர்கள் நுழைந்து விட்டார்களாக என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்று முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஸயரின் தலைநகர் கின்ஸாசாவில் உள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் விமான நிலையம் கைப்பற்றப்பட்ட செய்தியை ஒத்துக்கொள்ளவும் இல்லை மறுக்கவும் இல்லை என்று பி. பி. ஸி செய்தியாளர் தெரி வித்தார்.

எனினும் கிசங்கானி நகரில் பதற்றம் நிலவுவதாக அவர் தெரிவித்தார். அந்த நகரில் உள்ள வெளிநாட்டவரையும், தொண்டு நிறுவன அலுவலர்களையும் மீட் கும் பணி மேற்கொள்ளப்படுவதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிழக்கு ஸயரில் உள்ள இந்த நகரத்தை இவ்வாண்டு முற்பகுதியில்இருந்தே கிளர்ச்சிக் காரர்கள் சுற்றிவளைத்து நெருக்குதலுக்குள் உள்ளாக்கிக் கொண்டு வந்தனர்.

ஸயர் நாட்டு இராணுவத் தலைவர்கள் தங்கள் ஆயுதங்களைக்கீழே போடாவிட்டால் கிசங்கானி நகர் மீது பெரும் தாக்குதல் நடத் தப் போவதாக கடந்த வியாழனன்று கிளர்ச் சிப் படையினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஸயர் அரசின் இராணுவமும், வெளி நாட்டுக் கூலிப்படைகளும் குவிக்கப்பட்டிருந்த இந்த நகரத்தின் வீழ்ச்சி ஸயர் அரசுக்கு மரண அடியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

## போர் நிறுத்தம் ஏற்படுத்த ஐ.நா. செயலாளர் முயற்சி

கிழக்கு ஸயரில் கிசங்கானி நகரம் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ச்சியடைந்திருப்பதை அடுத்து அங்கு யுத்த நிறுத் தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஐ, நா. செயலா ளர் நாயகம் கோபி அனான் ஈடுபட்டிருக்கிறார்.

ஐ. நாவின் விசேட பிரதி நிதி மொகமட் சனூன் யுத்த நிறுத்தம் தொடர்பாக கிளர்ச்சியாளர் குழுத் தலை வர் கபிலாவுடன் பேச்சு நடத்தியுள்ளார். பேச்சு தொடர்பான விவரங்களை அவர் உடனடியாக தெரி விக்க மறுத்துவிட்டார்.

ஸயர் அரசு நிபந்தனை யற்ற பேச்சுவார்த்தைக்கு முன்வருமனால் யுத்த நிறுத் தம் செய்யத் தாங்கள் தயா ராக இருப்பதாக கிளர்ச்சிக் குழுத் தலைவர் தெரிவித் திருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

மத்திய ஆபிரிக்க நாடான ஸயரில் உடனடி யுத்த நிறுத் தத்தை ஏற்படுத்தும் தனது முயற்சி வெற்றியளிக்கும் என்று கோபி அனான் நம் பிக்கை தெரிவித்தார்.

(ஐ-3)

## பதவி விலகப் போவதில்லை என அல்பேனிய அதிபர் அறிவிப்பு

ரிரானா, மார் 17

அல்பேனிய நாட்டில் பெரும் குழப்பம் நிலவிவரு கின்றபோதும், தாம் பதவி விலகப் போவதில்லை என்று அந்த நாட்டின் அதிபர் சாலி பொரிஷா தெரிவித்துள்ளர்.

தாம் பதவிவிலகினால் நாட்டின் உறுதிப்பாடு பெரிதும் பாதிக்கப்படும் என்று அவர் அல்பேனிய தொலைக்காட்சிக்கு வெளி யிட்ட ஓர் அறிக்கையில் தெரி வித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் தேர் தலில் ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்தால் மட் டுமே தாம் பதவி விலகப் போவதாகவும் அவர் தெரி வித்தார்.

முன்னதாக அவர் பதவி விலக்க கூடும் என்று வெளி வந்த செய்திகளைத் தொடர்ந்து அல்பேனிய நாட் டுக்கு வெளிநாட்டு இராணு வத் துருப்புக்களை அனுப்பி வைக்கும் முடிவை ஐரோப் பிய யூனியன் வெளியுறவு அமைச்சர்கள் ஒத்திப்போட்ட னர்.

நிலைமையை நேரில் மதிப் பிடுவதற்காக பிரதிநிதி குழு ஒன்றை தலைநகர் ரிரானா வுக்கு அனுப்புவதற்கு அவர் கள் ஒப்புக் கொண்டனர்,

இதனிடையே ஆயிரக் கணக்கான மக்கள் அல்பேனி யாவை விட்டுத்தப்பி ஓடு கின்றனர்.

சுமார் 500 போர் கப்பல் ஒன்றின் மூலம் இத்தாலியை சென்றடைந்துள்ளனர்.

ஆத்திரமடைந்த கிளர்ச்சிக் கும்பல் ஒன்று துறைமுகம் ஒன்றில் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் 4 பேர் பலியா கினர்.

(ஐ - 3)

## இஸ்ரேலை வழிக்கு கொண்டுவர உதவுமாறு அரபாத் வேண்டுகோள்

### சர்வதேசப் பிரதிநிதிகள் மத்தியில் அவர் உரை

மத்திய கிழக்கு அமைதி முயற்சியைக் காப்பாற்றுமாறு பலஸ்தீன விடுதலை இயக் கத் தலைவர் யசீர் அரபாத் சர்வதேச சமூ கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்க ஐரோப்பிய மற்றும் அரேபிய ராஜதந்திரிகள் கலந்து கொண்ட கூட்டம் காஸாவில் நடைபெற்றது. தனது அழைப்பை ஏற்று அதில் கலந்து கொண்ட வர்களின் மத்தியில் உரையாற்றிய போதே அரபாத் முன்கண்ட வேண்டுகோளை விடுத் தார்.

பலஸ்தீனியர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை இஸ்ரேல் மீறிவிட்டது. இஸ்ரேலை மீண்டும் சரியான பாதைக்கு கொண்டுவர சர்வதேச சமூகம் உத்தரவிட வேண்டும் என்றும் யசீர் அரபாத் கேட்டுக் கொண்டார்.

கிழக்கு ஜெருஸலேமில் சர்ச்சைக்குரிய பகுதியில் புதிதாக யூதக்குடியிருப்புகளைக் கட்ட இஸ்ரேல் முடிவெடுத்ததை அடுத்து அமைதி முயற்சிகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

(ஐ)

## ஆடம்பர திருமணச் சடங்குகளுக்கு பாகிஸ்தானில் தடை உத்தரவு

இஸ்லாமாபாத், மார்ச் 17

திருமணக் கொண்டாட்டங்களை ஆடம்பரமாகக் கொண்டாடுவதை பாகிஸ்தானின் புதிய பிரதமர் நவாஸ் ஷெரீப் தடைசெய்துள்ளார்

நாட்டில் வீண் செலவுகளைக் குறைத்துவிடும் நோக்கில் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது

திருமணச் சடங்குகள் பாகிஸ்தானில் மிகப் பெரியளவு பணச் செலவுடன் பல நாள்களுக்குத் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படுவது வழக்கமாகும்,

தற்போதைய தடை உத்தரவு திருமணச் சடங்கு ஏற் பாட்டாளர்கள் ஆடம்பர அலங்கார அமைப்பாளர்களுக்கு பலத்த அடியாக அமைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

## கச்சதீவை மீட்கும் விடயம் தற்போது எமது அதிகார வரம்புக்குள் இல்லை

### முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை' மார்ச் 17

கச்சதீவுப் பகுதியில் இந் திய மீனவருக்கு மீன் பிடிக் கும் உரிமையையும் அங்கு யாத்திரை செல்லும் உரி மையையும் மீண்டும் பெற்றுத்தர தமிழக அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

தமிழக முதல்வர் மு. கரு ணாநிதி இவ்வாறு தெரிவித் திருக்கிறார்.

இலங்கையில் சிறை வைக் கப்பட்டிருக்கும் இந்திய மீன வர்களை மீட்பது தொடர் பாக தமிழக சட்டப் பேர வையில் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்கு பதில் அழித்து உரையாற் றிய போதே கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர் பாக மத்திய அரசுடன் மாநில அரசு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.



1974 இல் இந்த தீவு இலங் கையுடன் சேர்த்துக் கொள் ளப்பட்ட போதுமேற்படி உரி மைகள் அளிக்கப்பட வேண் டும் என்ற தமிழக அரசின் கோரிக்கை ஏற்றுக்கொள் ளப்பட்டது.

ஆனால், 1976 இல் மாநி லத்தில் ஜனாதிபதி ஆட்சி அமுலிலிருந்த போது இந்த உரிமைக்கான பிரிவு அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக்கப் பட்டுவிட்டது.

கச்சதீவை மீட்கும் விடயம் தற்போது அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

(ஐ-5)

## எய்ட்ஸுக்கு மருந்து: அமெரிக்கா விற்பனை

வாஷிங்டன், மார்ச் 17

உலகை அச்சுறுத்தி வரும் 'எய்ட்ஸ்' நோயை குணப் படுத்தக்கூடிய மருந்து அமெரிக்கர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தொற்றிக் கொண்டவர்களுக்கு மரணத்தை விளைவிக்கும் இக் கொடிய நோயை குணப்படுத்த ''வைரஸ் பெற்'' என்ற பெயர் கொண்ட மருந்து கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்டுள்ள வயது வந் தோர் மாத்திரமல்ல சிறுவர்களும் பயன்படுத்தக் கூடிய இந்த மருந்து அடுத்த வாரம் அமெரிக்காவில் விற்பனைக்கு விடப்படவுள்ளது.

'எய்ட்ஸ்' நோயாளி ஒருவர் இந்த மருந்தை நாளொன்றுக்கு இரு முறை பயன்படுத்த வேண்டும். நாளொன்றுக்கு ஒருவருக்கு இந்த மருந்துக்காக ஏற்படும் செலவு 15 அமெரிக்க டொலர்களாகும் (சுமார் 825ரூபா)

இந்த மருந்தை ஒருவருடம் தொடர்ந்து பயன் படுத்த வேண்டும். இதற்காக ஏற்படும் செலவு 5 ஆயிரத்து 650 அமெரிக்க டொலர்களாகும் (சுமார் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா).

(ஐ-10)

## புலிகளின் உளவாளிகள் என கண்டியில் இரு தமிழர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 17

விடுதலைப் புலிகளின் உள வாளிகளாகச் செயற்பட் டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு தமிழர்களைக் கண்டிப் பொலீஸார் கைது செய்தனர்.

கைதானவர்களில் ஒருவ ரான கிளிநொச்சியைச் சேர்ந்த மாணிக்கம் (வயது 35) என்பவர் கண்டி பலகல் லவில் வசித்து வந்தார் என் றும் —

இவர் அடிக்கடி வடக்கே சென்று வருபவர் என்றும் — கண்டிப் பொலீஸார் தெரி வித்தனர்.

கைதான மற்றவர் 24 வய துடைய தமிழ்ப் பெண் ஆவார்.

இவர் கொழும்பில் இருந்து அடிக்கடி வடக்கே சென்று வருபவர் என்று தெரிவிக்கப் பட்டது.

இவரை வெல்லம்பிட்டி யில் வைத்து கண்டிப் பொலீ ஸார் கைது செய்தனர்.

(இ-3-150)

## 35 லீற்றர் டீசல்

பளைப் பிரதேச செயலகத் தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பளை ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையத்தில் வாராந்தம் 35 லீற்றர் டீசல் வழங்கப் படுகிறது.

பிரதேச செயலரினால் சிபார்சு செய்யப்பட்ட வாக னங்களுக்கே டீசல் வழங்கப் படுகிறது.

இதேவேளை — டீசல் வாகனம் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு தினமும் ஐந்து லீற்றர் வீதம் [illegible] வழங்கப் படுகிறது.

## மாசார் தரவைப் பகுதியை நோக்கி சனியன்று பரவலாக ஷெல் வீச்சு!

தென்மராட்சி, மார்ச் 17

நேற்று முன்தினம் அதி காலை 5.15 மணி தொடக் கம் 7.30 மணிவரை வட மராட்சி கிழக்கு மருதங்கேணி முகாமிருந்து மாசார்தரவைப் பகுதியை நோக்கி பரவலாக ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

அதிகாலை 4.45 மணிக்கு இப்பகுதியில் பெரும் குண்டு வெடிப்புச்சத்தம் கேட்டதை யடுத்து ஷெல் வீச்சு நடத்தப் பட்டதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை சாவகச் சேரி நகர்ப் பகுதியில் உள்ள முகாம் ஒன்றில் குண்டு வெடித்ததில் ஆறு படை யினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஹெலி கொப்டர் மூலம் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கோமதி என்ற பெயரிலுள்ள பாடக்குறிப்பு (G. A. Q. Peradeniya) யாழ். தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 20ஆம் திகதிக்கு முன் பாலசுப்பிரமணியம், 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (45839)

### நாடகம் எழுதுவது?

இப்பொழுதும் நாடகங்கள் எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை பல்வேறு நாடகங்களையும் எப்படி எழுதுவது என்று விளக்கிக் கூறுகின்றார். நாடகத்தைக் கற்பவர்கள் எல்லோரும் வாசிக்க வேண்டிய நூல்–ரூபா 50/. (45490)

### மணமகன் தேவை

அரச பாடசாலையில் ஆசிரியையாகப்பணிபுரியும்29வயது நற் குடும்பத்து, இந்து பெண்ணுக்கு மணமகன் தேவை. நல்ல பொருளாதார பின்னணி உண்டு. ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. கடிதத் தொடர்பு; இல.598 C/o உதயன், யாழ்ப்பாணம். [45826]

### A/L பௌதிகவியல்

பிரத்தியேக வகுப்புக்கள்— சடப்பொருளியல், A/L1997, ஆரம்பம்;- புதன்(19.03.97) காலை 6.30 மணிக்கு, இடம்:- 18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். ஆசிரியர் திரு. ஸ்பெல்மன். [45834]

### பிரத்தியேக வகுப்புக்கள்

பொறியியல் A/L 1999 ஆரம்பம்:- வியாழன் (20-03-97) தொடர்பு:- இல. 18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் ஆசிரியர் திரு: ஸ்பெல்மன். [45835]

### பஞ்சாங்கம்

1997 — 98 ஆம் ஆண்டுக்கான ஈசுவர வருஷ திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக சாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/308]

### வீடு தேவை

சிறிய வீடு, அல்லது அனெக்ஸ் அரசாங்க உத்தியோகத்தருக்கு தேவை. திருநெல்வேலி சந்தி சுற்றாடலில்தொடர்பு:- சு. சண்முகராஜா (மதிப்பீட்டாளர்) 387, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (45825)

### புலமைப்பரிசில்

ஆண்டு 5 கற்பிக்கும், ஆசிரியர்கட்கும், புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார் படுத்துபவருக்குமான 'ஆண்டு 5 புதிய பாடத்திட்டம் 1997 எல்லாப் பாடங்களையும் உள்ளடக்கியது. கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தக சாலை, யாழ்ப்பாணம். [45824]

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## ஆதனவரி அறிவித்தல்

1997 ஆம் ஆண்டு 1 ஆம் கந்தாயத்திற்குரிய ஆதனவரியை 31 - 03 - 97 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 - 30 மணி வரை தண்டமின்றி செலுத்திக் கொள்ளலாமென்பதையும் குறிப்பிட்ட திகதிக்குப் பின் செலுத்தப்படும் வரியுடன் வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக அறவிடப்படும் என்பதையும் 1997 ஆம் ஆண்டு 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய வரியை 30 - 04 - 97 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்துவோருக்கு கந்தாயத்திற்குரிய வரியில் 5% வீதம் கழிவு வழங்கப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

எனவே, உரிய காலத்தில் வரிகளை நிலுவையின்றி செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

சி. நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 13 - 03 - 97 (சி-318)


## றெனி மூக்குக் கண்ணாடி அகம்
**'RENNY OPTICIANS'**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

இல, 288, நாவலர் வீதி,
(யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக)
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.




கண்டி வீதி,
(பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி.

இல. 19/3, கொழும்புத்துறை வீதி, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (45811)


உ

கேசாவில் முத்து விநாயகர் துணை

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான தாது வருடம் பங்குனி 6 ஆம் நாள் (19-03-1997) புதன்கிழமை பூசம் நட்சத்திரமும் இடப இலக்கினமும் கூடிய காலை 9-20 முதல் 9-45 மணி வரையுள்ள சுபவேளையில்,

திருவருட் துணையுடன்

எமது ஏக புதல்வி

★ செல்வி ஏகாம்பரநாதன் கார்த்திகா ★

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா செய்ய பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பித்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது பேரன்புடையீர்! வேறு தனிப்பட்ட அழைப்பிதழ் விடுக்கப்படாததை மன்னித்து இதனையே அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி ஏகாம்பரநாதன் தேவராணி தம்பதிகள்.

வரவேற்பாளர்கள்:
திரு. திருமதி சு. லோகநாதன் புஸ்பராணி தம்பதிகள்,
திரு. திருமதி கா. பாலகிருஷ்ணன் ருக்மணிதேவி தம்பதிகள்.

''மணிரங்கம்''
41, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி-320)

## நற்சேவைதனிலே
## நூறு ஆண்டுகள்

**பருத்தித்துறை**

யா/ வேலாயுதம் மகா வித்தியாலயத்தை வளர்த்தெடுத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

நவரத்தினக் குருக்கள் (ஆசிரியர்) குடும்பத்தினர்.
(45836)

உ

ஸ்ரீ ராம ஜயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி லோகேஸ்வரியம்மா இராமச்சந்திர சர்மா (குஞ்சம்மா)

திதி: பூர்வபக்ஷ நவமி

மண்ணில்: **1946 - 08 - 05**

விண்ணில்: **1997 - 02 - 15**

அன்னாரின் இறுக்கிரியைகள், ஆத்ம சாந்தி கிரியைகள் ஆகியவற்றில் பங்கு பற்றி ஆறுதல் கூறியவர்களுக்கும், ஊரவர்கள், உறவினர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் தாயார், சகோதரர்கள்,
மைத்துனிமார்கள், மருமக்கள்.

''வல்லிபுராலயம்''
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (9394)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

உதிப்பு: 02 — 06 — 1952



உதிர்வு: 16 — 02 — 1997

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(கிராம அலுவலர் – பளை)

அன்பு, அடக்கம், கல்வி அறிவு, இரக்கம் இவை யாவற்றுக்கும் இலக்கணமாக வாழ்ந்து பாசத்தின் பிணைப்பால் எம்மை உருவாக்கி வாழும் நேரத்தில் எம் கண்களை ஈரமாக்கி வானகம் சென்றீரோ? கண்களை மூடி முப்பத்தொரு நாள்கள் ஓடி மறைந்திடினும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

நாளை (18-3-97) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

பளை நகரம்,
பளை. (சி/317)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின்

பாரம்பரியத்தை காத்து கல்லூரியின் மேன்மைக்கு உதவிய

## அதிபர் திரு. கந்தையா நடராசா B.Sc.(Dip.-in-Ed.), S.L.E.A.S.

## அவர்களின் பிரிவுபசார சிறப்பு மலர்

FIAT LUX

## அர்ப்பணம் நிறைந்தவர்

கழுதையை நன்கு புடைத்தால் குதிரை யாகுமென்று யாரோ சொல்லக் கேட்டு அவ் விதமே ஒருவன் செய்தான் என்று ஒரு கதை யுண்டு. இத்தகைய முறையிலேயே நம் பிள்ளைகளுக்கு இப்போது கல்வியளிக்கப்படு கிறது. இம்முறை ஒழிய வேண்டும். பலாத் கார முறையில் சீர்திருத்தம் செய்ய முயல் வதில் சீர்திருத்தத்தின் நோக்கம் குன்று கிறதே ஒழிய நிறைவேறுவதில்லை என் கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஹாட்லிக் கல்லூரியின் பாரம்பரியம், கல்விமுறை இலங்கையிலே மிகவும் போற் றப்படுவதாகும். இக்கல்லூரியில் 25 ஆண்டு கள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் திரு.க. நடராசா அவர்கள். இவரது எளிமை தான் இவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு இலக் கணம். இவரது சேவையை கல்வி உலகம் மறக்க வாய்ப்பு இருக்காது. அன்னாருக்கு தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி சகல நலன் களையும் நல்கிட மனதாரப் பிரார்த்திக் கின்றோம்.

சுவாமி சித்ரூபானந்தா
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

## மறக்க முடியாத பணிகள்

வேதம் ஒதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி பூதம் சூழப் பொலிய வரு கின்ற எம் பசுபதீஸ்வரன் ஆலய நித்திய விசேட பூசையில் கலந்து, தொண்டு செய்து வருபவர் எமது ஹாட்லிக் கல்லூரியின் அதி பர் க. நடராசா அவர்கள். ஹாட்லிக் கல் லூரி என்னும் பாரிய கல்விக் களஞ்சியத் தினூடாக அவர் ஆற்றிய அரும்பணிகளை அவர் ஒய்வு பெறுகின்ற இந்தநேரத்திலே மறக்கமுடியாது.

புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம்
தர்மகர்த்தா
தி. நாகராஜாவும்
திருத்தொண்டர்களும்.

## ஹாட்லியுடன் ஒன்றியவர்

எமது கல்லூரி அதிபர் திரு. கந்தையா நடராசா அவர்கள் தமது 60 ஆவது ஆண் டில் காலடியெடுத்து வைக்கும் போது ஹாட் லியை விட்டு இளைப்பாறிச் செல்வது எங் களுக்கு ஒரு பேரிழப்பாகும். ஹாட்லியின் 150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றில் 14 ஆவது அதிபராக திறம்பட சேவை யாற்றி பலரினதும் பெருமதிப்பைப் பெற்ற இவர் 17 - 03 - 1997 இல் ஒய்வு பெறுகின் றார். 36 வருட ஆசிரிய சேவையில் 26 வருடங்கள் இக்கல்லூரியில் சேவை செய்துள் ளார்.

இவர் 3 வருடங்கள் இ/பெல்மதுளை ம.ம.வி இலும், $7\frac{3}{4}$ வருடங்கள் கொ/இரத் மலானை இந்துக் கல்லூரியிலும் கற்பித்த பின்னர் 24 - 11 - 1971 இல் ஹாட்லிக் கல்லூரியில் காலடியெடுத்து வைத்தார். அன்றுதொட்டு இன்றுவரை இவர் ஹாட் லிக் கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், பிரதிஅதிபராகவும், அதிப ராகவும் சேவையாற்றியுள்ளார். யாழ். இந் துக்கல்லூரியின் பழைய மாணவனான இவர் ஹாட்லியுடன் ஒன்றிவிட்டார் என் றால் அது மிகையாகாது. இவர் உயர்தர வகுப்பில் தூயகணிதம், பிரயோககணிதம், இரசாயனவியலைக் கற்பித்திருந்தார். அண் மையில் வணிகப்புள்ளி விவரவியல் பாடம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதை இக் கல்லூரி மாணவர்களுக்குக் கற்பித்து அரும் சேவையாற்றியுள்ளார்.

இவ்வாறாக அதிபராக ஆசிரியராக தன் னையே அர்ப்பணித்த அதிபரை என்றும் ஹாட்லி மறக்காது. இவரின் ஒய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின் றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

## கல்லூரி மகிமையைப் பேணியவர்

19-10-1993 இல் இருந்து ஹாட்லிக் கல்லூரியின் அதிப ராக சிறப்புடன் சேவையாற்றிய அதிபர் திரு. க. நடராசா அவர்களுக்குவாழ்த்து அனுப்புவதில் மகிழ்கின்றேன்.

திரு. கந்தையா நடராசா அவர்கள் விஞ்ஞானப் பட்ட தாரி ஆசிரியராகவும், இலங்கை கல்வி நிருவாக சேவை யைச் சேர்ந்த அதிபராகவும் கடந்த முப்பத்தேழு ஆண்டு கள் கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அதிபர் நடராசா அவர்களின் மென்மையான நடையும், அளவான பேச்சும் இதமான பதிலும், அழுத்திக் கூறும் உண்மைகளும் அனைவரையும் கவர்ந்திழுக்கும்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ் நிலைகளுக்கு மத்தியிலும் முகம் கொடுத்து கல்வியில் ஏற் பட்ட பின்னடைவுகளை வெற்றி கொண்டு க. பொ. த உயர்தரப் பரீட்சையில் உன்னத பெறுபேறுகளை பெற்றுத் தந்து கணிதத்துறையிலும், வணிகத் துறையிலும் யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்களை வழி நடத்தி ஹாட்லிக் கல்லூரியின் மகிமையை தொடர்ந்தும் நிலை நாட்டிய பெருமை அதிபர் திரு. க. நடராசா அவர் களுக்கு உரித்துடையதாகும்.

அதிபர் பதவியிலிருந்து ஒய்வு பெறும் திரு. நடராசா அவர்கள் தொடர்ந்தும் கல்வியுலகிற்கு தன்னாலியன்ற பணிகளை ஆற்றுவதுடன் அவரும் அவரது குடும்பத்தினரும் சிறப்புகளுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

சி. சிவராசா,
கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்-02.



திரு. கந்தையா நடராசா B.Sc. (Dip,-in- Ed.) S.L.E.A.S.

## ஹாட்லியின் உயர்ந்த கோடு

ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் திரு. க. நடராசா ஒரு விஞ்ஞானப்பட்டதாரி; கல்விநிர்வாக சேவையைச் சேர்ந்தவர்; கணித வல்லுநர்; சிறந்த ஆசிரியர்; கல்வி கற்பிப்பதே அவரது குறிக்கோள். ஒய்வு பெறும் நாளில்கூட க. பொ. த (உ/த) வகுப்பிற்கு தூய கணிதம், இரசாய னம், வணிகப்புள்ளி விவரவியல் கற்பிப்பதை அறியக்கூடிய தாக உள்ளது. வடமராட்சியின் உயர்கல்வி தாபன மொன்றின் அதிபர் கற்பித்தலில் நேரம் செலவிடுவது ஒரு பெரிய விடயம். அனைத்து அதிபர்களும், ஆசிரியர்களும், பார்த்துக் கற்கவேண்டிய ஒரு பல்கலைக்கழகமாக திரு. க. நடராசா விளங்குகின்றார்.

மாணவர்களின் நலனே தனது நலன் என்னும் எண் ணத்தையுடைய, மாசற்ற மனத்தையுடையவர். அவர் தம் பாடசாலையிற் கற்பிக்கும் ஆசிரியர்க்கு ஒரு பாதுகாவ லன். பாடசாலை வேலைகள் எல்லாவற்றையும் தானே நடத்தி முடிக்கக்கூடிய ஒரு வல்லாளன். ஹாட்லியின் ஒரு சகாப்தத்தில் உயர்ந்த நேர்கோடாக உள்ளஓர் அதிபர்.

இவர் ஒய்வுபெற்ற பின்பும் கல்விக்கு உதவவேண் டும் என அன்புக்கட்டளை இட்டு, சகல நலன்களும் பெற் றுப் பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

திரு. வே. தி. செல்வரத்தினம்
பருத்தித்துறை. கோட்டக்கல்விப் பணிப்பாளர்

## வரலாறு படைத்தவர்

கடந்த 25 வருடங்களாகத் தனது கல் விப் பயணத்தைக் ஹாட்லிக் கல்லூரியில் தொடர்ந்து, இன்றைய நாளில் ஹாட்லி வாழ்வின் இறுதிக் கட்டத்தில் நிற்கும் அதி பர் உயர் திரு. க. நடராசா அவர்களை மெதடிஸ்த திருச்சபையின் சார்பில் வாழ்த்து வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''எவர் ஒருவர் மக்களின் அறிவு வளர்ச் சிக்கும் நல்வாழ்விற்கும் தன்னை முழுமனத் துடன் அர்ப்பணிக்கின்றாரோ, அவரே இறைவனின் திருச்சமுகத்தில் உயர்ந்து நிற் கிறார்'' அந்த வகையில் அதிபர் திரு. க. நடராசா அவர்கள் இந்த வடமராட்சி மண்ணைச் சார்ந்தவராக இல்லாதிருந்தும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவ ராக அல்லாதவராக இருந்தும் தமது ஆசிரிய வாழ்வை ஹாட்லிக்கு அர்ப்பணிக்கும் நோக்குடன் இப்பிரதேசத்தில் குடியேறி, மாணவர் சமூகத்துக்குத் தன்னை கொடுத்து அதிபராக உயர்ந்து இந்த வடமராட்சி மண் ணில் வரலாறு படைத்து நிற்கின்றார்.

''அவரது சேவை இறைவனின் சந்நிதி யில் என்றும் போற்றப்படும்'' என்று வாழ்த் துவதோடு, அவரது தன்னலங் கருதாத சேவைக்கு இறையாசியும் வேண்டுகிறேன்.

வண. கே. நித்தியானந்தன்,
மெதடிஸ்த திருச்சபை, பருத்தித்துறை.

## விஞ்ஞான வித்தகர்

யாழ்பாடி நகரத்தின் சிரசாக விளங்கும் காரைநகரின் களபூமியில் தோன்றிய சிறப் புக்கும், மதிப்பிற்கும் உரிய ஆசிரியர் திரு. கந்தையாவின் இருபுதல்வர்களில் மூத்தோன் உயர்திரு. க. நடராசா அவர்கள் கால் நூற்றாண்டுகளாக விஞ்ஞான பாடங்களை கற்பித்து, உலகத்தின் எல்லாப் பாகங்களி லும் ஹாட்லிக் கல்லூரியின் ஒளியைப் பிரகா சிக்க வைத்த அதி திறமையான ஆசிரியராக சேவையாற்றி ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அதிபர் பதவியில் அமர்ந்தார். 17.03.97 இல் அறுபது வயது பூர்த்தியாகி இளைப்பாறும் அதிபர் திரு. க. நடராசா அவர்கள் தனது குடும்ப சமேதராய் நீடூழி வாழ்க என்று போற்றி பெரியார் அவர்களின் குடும்பத்தின ரின் சுகநலத்திற்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி நிற்போமாக!

வினாசித்தம்பி சேதுநாயகம்
தலைவர், பழைய மாணவர் சங்கம்.

## செயல்திறன் மிக்க அதிபர்

ஆடம்பரமில்லாத எளிமையான மெலிந்த தோற்றம். மென்மையான குரல். துறவியொத்த வெள்ளை வெளேரென்ற உடை. பதுமையான நடை. இவையெல் லாம் ஒருங்கு சேர்ந்தவராக ஹாட்லிக்கல் லூரியில் ஓர் அதிபர் இருந்தார் என்று குறிப்பிட்டால் அது நிச்சயமாக திரு. க. நடராசா அவர்களைத்தான் குறிப்பிடுவ தாக இருக்கும். சிலருக்கு பதவியால்தான் பெயர். ஆனால் இக் கல்லூரியின் பாரம் பரியம் பதவி வகிப்பவரால் பதவிக்கு மெரு கேற்பட்டுவிடுகிறது. திரு. நடராசா அவர் களும் தமது கடமைப்பற்று விசுவாசம் போன்ற நற்பண்புகளால் அதிபர் பதவிக்கு மேலும் மெருகூட்டியதோடு தாம் இளைப் பாற இருக்கின்ற இறுதிக்கால கட்டத்தில் கூட பல சொல்லொணா இடர்பாடுகளின் மத்தியிலும் முழுமூச்சுடன் செயல்பட்டு பாடசாலையின் புகழை மேலும் உயரத் துக்கு இட்டுச் சென்றுள்ளார் என்பதனை அண்மையில் வெளியான க. பொ. த. உயர் தர பரீட்சை முடிவுகள் எடுத்தியம்புகின்றன.

திரு. நடராசா அவர்களின் தன்னலம் கருதாத நற்பணிகளை கல்லூரியின் மாண வர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரினதும் சார்பில் நன்றியறிதலுடன் நினைவு கூர்ந்து அன்னா ருக்கு நீண்ட ஆயுளையும் சுக வாழ்வையும் வழங்க இறைவனை வேண்டுவோமாக.

பொ. குமாரசாமி
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்


## ஒய்வு பெறும் ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. க. நடராசாவை

## ( ) வாழ்த்துவோர் ( )

★ சுசீலா ஆபரண நகை மாளிகை, பருத்தித்துறை.
★ குணம் குளிர்களி அகம், பருத்தித்துறை.
★ பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்.
★ படம் பெருப்பித்தல், கலர் படமெடுத்தலில் பிரசித்திபெற்ற குகன்ஸ் ஸ்ருடியோ, பருத்தித்துறை.
★ புலோலி ப. நோ. கூ. சங்கம்.

(சி-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சிக் கோட்டத்தில்

# பாடசாலைக்குச் செல்லாதோருக்கு

# விசேட கல்வி, தொழிற்கல்வி வசதி

தென்மராட்சி, மார்ச் 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாடசாலைக்குச் செல்லாத 5 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு கல்வி போதிக்க கோட்டக் கல்வி அலுவலகத்தினர் புதிய செயற் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளனர்.

பாடசாலைக்குச் செல்லாத இப் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டவும் பாடசாலைகளில் இணைப்பதற்கும் அல்லது தொழிற் கல்வி புகட்டவும் செயற் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தினை செயற்படுத்த பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராம அலுவலர்கள் மூலம் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் மூலம் தென்மராட்சிப் பிரதேசத்தில் அனைத்து பிள்ளைகளும் கல்வி அறிவு பெறவும், தொழிற்கல்வி பெறவும் வாய்ப்புகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-117)


## விசேட கணிதம்

**கணிதத்தில் 'D' பெறுபேறுடைய O/L மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!**

ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

ஆசிரியர்: **S. P. வினோத்**

**ஆரம்பம்: 18 - 03 - 1997 பி. ப. 3 மணி**

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

**NEW ASTAN**

5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(45322)


## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு: 15 — 06 — 1918

இறப்பு: 28 — 03 — 1996

### திருமதி பவளம் சண்முகம்

பாசத்தின் உறைவிடமே! பண்பு நிறை பேருருவே!
மாசற்ற மனத்தோடு மங்களமாய் வாழ்ந்து
பேர்பெற்ற பெருவாழ்வை எமக்காய் அளித்து
நாம் வாழும் நேரத்தில் சோர்வுற்று - நாம்
தவிக்க எம்மை விட்டு பிரிந்ததுவும் - ஏன்
அம்மா! ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறுமோ எம்துயரம்.


உங்கள் பிரிவால் துயருறும்:

**மக்கள், மருமக்கள், பேரர்கள், பூட்டர்கள்.**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(9389)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 — 05 — 1955

உதிர்வு: 15 — 03 — 1989

### அமரர் முத்து மனோகரன்

(புலோலி தெற்கு, கூவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியரும்)

**திதி: 17-03-97**

ஆண்டெட்டு ஆனதையா - உன்
அன்புமுகம் காணாமல்
மீண்டொருகால் வந்திங்கே - உன்
மனந்திறந்து பேசாயோ?

உங்கள் பிரிவால் துயருறும்:

**அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர்.**

(45803)

## தவக்காலச் சிந்தனை

**(34 ஆம் நாள் - திங்கள்)**

கையும் மெய்யுமாக விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை பரிசேயரும், மறைநூல் வல்லுனரும் ஆண்டவர் இயேசுவிடம் கூட்டிவந்தனர். மோயீசன், சட்டம் இப்படியானவர்களைக் கல்லால் எறிந்து கொல்லுவது; நீர் என்ன சொல்கிறீர் என்றனர். அநீதர்களின் முறைப்பாட்டைக் கேட்ட இயேசு ''உங்களில் பாவமில்லாதவன் முதலில் அவள் மேல் கல்லெறியட்டும்'' (அரு. 8:7) என்றார். ஒருவர்பின் ஒருவராக எல்லோரும் அவ்விடம் விட்டு நழுவிச்சென்றனர்.

மாசு கற்பிப்பது மனித மனம். மன்னிப்பதோ தேவன் மனம். எம்மை விடுத்து மற்றவர்மேல் பழி சுமத்த நாம் முந்திக் கொள்வதில்லையா? எமக்கு அந்நிலையாயின் நியாயம் சொல்கிறோம். தவறுகளை மன்னிப்பதால் சமரசம் உருவாகும். தண்டிக்கும் போது தாறுமாறுகள் தொடர வாய்ப்புண்டாகும். மன்னிப்பதா? தண்டிப்பதா? எதை நாம் செய்யவேண்டும்?

- அ. பீற்றர் ராஜன்

# சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் நல்வாழ்வு உதவித் திட்டங்கள்

தென்மராட்சி, மார்ச் 17

லயன்ஸ் கழக 306 B மாவட்ட உப ஆளுநர் லயன் கே. தில்லைநாதனின் விஜயத்தை ஒட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பல்வேறு புதிய நல்வாழ்வுத் திட்டங்களை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்தனர். இத்திட்டங்களின் படி —

கால் ஒன்றை இழந்து ஊன்றுகோலுடன் வாழ்ந்த ஆனந்த சுப்பிரமணிய சர்மா என்பவருக்கு ஜெயப்பூர் செயற்கைக் கால் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் இவருக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டன,

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள க. பொ. த, உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பார்வையிழந்த குடும்பத் தலைவனையுடைய ஒருகுடும்பத்தைப் பாராமரிக்கும் பொறுப்பினையும் அக் குடும்பத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியினை பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையில் 4'ஏ' சித்தி பெற்ற நான்கு மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்கள் வழங்கப்பட்டன

(ஐ-117)

அம்பாறை ஆலையடிவேம்பு

# பிரதேச சபை எல்லையை மீள நிர்ணயம் செய்வதற்கு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 17

அம்பாறை ஆலையடி வேம்பு பிரதேச சபை எல்லைகளை மீள நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரசியல் நடவடிக்கையை அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம் கண்டித்துள்ளது.

இது ஒரு திட்டமிட்ட நிலப் பறிப்புத் திட்டம் ஆகும். என்று அந்தச் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

முன்னர் அக்கரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஒன்றாக இருந்த ஆலையடி வேம்பு, கருங்கொடித் தீவுப் பகுதியில் கடந்த ஐ.தே.க அரசினால் தனித்தனிப் பிரதேசசபைகளாகக் கொண்டு வரப்பட்டு நிலப்பகிர்வு செய்யப்பட்டது.

இந்த எல்லை நிர்ணயத்தினாலேயே தமிழர்களின் பூர்வீக நிலங்கள் முன்னர் பறிக்கப்பட்டன என்றும்—

தற்போது ஆலையடி வேம்பு, கருங்கொடித்தீவு ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளையும் எல்லை மீள் நிர்ணயம் செய்ய அரசுதிட்டமிட்டு வருகிறது. இத் திட்டத்தை தாம் எதிர்ப்பதாகவும் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கப் பொதுச் செயலர் சிவஸ்ரீ சிவஞானச் செல்வ ஐயர் தெரிவித்துள்ளார்.

(ஐ)


## புது வருடத்தை முன்னிட்டு

# மகாநதியின்

மாபெரும் சிறப்புத்தள்ளுபடி விற்பனை

10% முதல் 20% வரையிலான சிறப்புக்கழிவு

இத்தள்ளுபடி 18-3-97 தொடக்கம் 18-4-97 வரை

இன்றைய தலைமுறையினர்க்கேற்ப இறக்குமதி செய்யப்பட்ட

★ திருமணப்பட்டுச் சேலைகள், பட்டுவேட்டிகள்

★ ஆடவர்களுக்கேற்ற அழகான டிசைன்களில் T சேட், சேட், றெடிமேட் றவுசர், சூட்டிங் வகைகள்

★ மங்கையர்களுக்கேற்ப அழகான டிசைன்களில் ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண், புதிய சாறிவகைகள் (இந்தியன், முத்து, காதல்கோட்டை, ஔவைசண்முகி, தேவராகம், அருணாச்சலம்) மேலும் புதிய சாறி வகைகள்

★ சிறுவர், சிறுமியர்களுக்கேற்ப கண்கவர் சிங்கார ஆடைவகைகள்

மற்றும்

சகலவிதமான ரவிக்கைதுணிவகைகளும், பட்டசில்க், யோயோ, இன்ரகூலர் பிறின்ட், பிளேன், வாபிறா போன்ற துணி வகைகளுக்கும்

# மகாநதி புடைவை அகம்

சாவகச்சேரி.

(45837)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible]

# உதயன்

## பெற்றோரின் அச்சம்

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது, முன்னர் நாளாந்தம், அல்லும் பகலும், ஷெல் வீச்சுகளும், விமானக் குண்டுத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. அவற்றின் விளைவாக குழந்தைகளும், பெரியவர்களுமாக ஆயிரக் கணக்கானோர் பலியாகி மண்ணோடு மண்ணாகிப் போனது தமிழர் வரலாற்றில் மறைக்க முடியாத அநியாயமாகும்.

அப்போதெல்லாம், எக்கணமும், எந்த நேரமும் ஷெல் வந்து கொண்டிருந்ததால் யாழ்ப்பாணம் 'ஷெல் வந்த' — 'செல்வந்த' பூமி என்று இலக்கிய நயத்துடன் மக்களால் வர்ணிக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள் பல வற்றிலும் கூட ''இந்தச் 'ஷெல்வந்த' பூமியில்'' என்று பேச்சாளர்கள் குறிப்பிட்டு வந்தனர்.

அந்த நிலை பெரியளவில் அருகிப் போக, யாழ்ப்பாணக் குடாநாடு இப்போது மிதிவெடிகள், வெடிப் பொருள்கள் செறிந்த மண்ணாகிவிட்டது. எங்கு எந்த இடத்தில் காலை வைத்தால் மிதிவெடிக்கு அதனை இழக்க நேரிடுமோ என்ற அச்சத்துடனேயே மக்கள் நடமாட வேண்டியுள்ளது.

மிதி வெடியும், மற்றும் போரின் போது இருதரப்பினரும் பயன் படுத்திய குண்டு மற்றும் வெடிப் பொருள்களும் வீட்டிலும் இருக்கலாம், வீதியிலும் கிடக்கலாம்; விளையாட்டு மைதானத்திலும் புதைந்திருக்கலாம், வயலிலும், வளவிலும், கடற் கரையிலும், மரத்தடியிலும் மறைந்திருக்கலாம்; என்ற ஏக்கத்துடனேயே மக்கள் நடமாட வேண்டியுள்ளது.

மீளக்குடியமர்ந்த பின்னர் மிதிவெடிகளாலும், வெடிப்பொருள்களாலும் பல உயிர்கள் காவப்பட்டுள்ளன. ரகம் தெரியாத பொருள்களை எடுத்து விளையாடிய இளம் பிஞ்சுகள், — சிறுவர்களும் — மாணவர்களும் — கருகிப் போய்விட்டனர்; அவலமாக மாண்டுவிட்டனர்.

இந்த வரிசையில் மாணவர்கள் தமது பாடசாலைகளில் நடைபெறும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளின் போது உயிராபத்துக்கு ஆளாகாமல் தடுக்கப்பட வேண்டும் என்று பெற்றோர் சார்பில் குரல் கொடுக்கப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களில் மிதிவெடிகள் கண்டெடுக்கப்பட்டன என்ற தகவல்கள் பெற்றோர்களை மேலும் அச்சமடைய வைத்துள்ளது.

எனவே பாடசாலை நிர்வாகிகளும், கல்விப் பகுதியினரும் இது விடயத்திலும் மிகவும் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும், அக்கறையுடனும் செயற்பட வேண்டும். வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் மைதானங்களை கல்விப் பகுதியூடாக படையினருடன் தொடர்பு கொண்டு போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னரே, பயிற்சிகள், ஒத்திகைகள் ஆரம்பிப்பதற்கு முன்னரே, சோதனை செய்விக்க வேண்டும்.

குறிப்பிட்ட மைதானத்தில் வெடிப்பொருள்கள் இருக்காது என்ற எழுந்தமான அனுமானத்துடன் செயற்பட்டு ஆபத்தை விலைக்கு வாங்கக் கூடாது. மாணவர் உயிருக்கு உலைவைத்து விடக்கூடாது. தடுப்பதும் தவிர்ப்பதும் உயிர்காக்க உதவும்.

# பேச்சை ஆரம்பிக்கவலியுறுத்துகிறது அகதிகளுக்கான அமெ. கவுன்ஸில்!

கொழும்பு, மார்ச் 17

''இலங்கை அரசாங்கமும்' விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பேச்சுக்களுக்கு உதவ 3 ஆம் தரப்பு ஒன்றை கண்டுபிடித்துத் தர எம்மால் முடியும்.''

மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டுள்ள ''அகதிகளுக்கான அமெரிக்க கவுன்ஸில்'' என்ற அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்துடனும், அமெரிக்க அரசாங்கத்துடனும் மிகவும் நெருக்கமான இந்த அமைப்பு இலங்கை நிலைவரம் குறித்து வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையை ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏடு நேற்று வெளியிட்டிருந்தது.

இந்த அமைப்பின் கொள்கை வகுப்பாளர் கிராம் ஏ. ரூயிஸ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு தள நிலையளை ஆய்வு செய்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு — கிழக்கில் எமது அமைப்பு மேற்கொண்ட ஆய்வுகளின்படி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாவிட்டால் அங்கு சிக்கியுள்ள மக்களுக்கு தீர்வு ஏதும் கிட்டாது என்பது தெளிவாகியுள்ளது.

பேச்சு நடத்துவதன் மூலமே இடம்பெயர்வு இல்லாமை, இயல்பு நிலை, சமாதானத் தீர்வு ஆகியவற்றைக் காணமுடியும்.

14 வருடகால பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே பேச்சு நடத்தப்பட வேண்டும்.

உலகில் பல நாடுகளில் இடம்பெற்ற மோதல்களில் தலையிட்டு தீர்வு காண்பதில் அமெரிக்கா வெற்றிபெற்றுள்ளது.

இதேபோன்று இலங்கைப் பிரச்சினை விடயத்திலும் 3 ஆம் தரப்பு ஒன்றைக் கண்டு பிடித்து அமெரிக்கா உதவ முடியும்.

புதிதாக ஆரம்பிக்கும் பேச்சின் முதல் சுற்றை நடுவரின் உதவியுடன் நடத்தலாம். இதற்கு அமெரிக்கா உதவ முடியும்.

95 ஒக்ரோபர், 96 ஏப்பிரல், 96 ஜூன் ஆகிய காலப் பகுதிகளில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னிக்கு இடம் பெயர்ந்தவர்கள் அல்லது யாழ்ப்பாணம் திரும்பியவர்கள் குறித்து சுயேச்சையான தகவல்கள் அவ்வளவாகக் கிடைக்கவில்லை.

எனினும் கீழ்க்காணும் சிபார்சுகளை சமர்ப்பிக்கிறோம்.

★ குடிமக்கள் காணாமற் போகும் சம்பவங்களுக்கு படையினர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

★ உள்ளூர், சர்வதேச தொண்டர் அமைப்புக்களை பிரச்சினையான பகுதிகளில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும். அந்த அமைப்புக்கள் அப்பகுதிகளில் நிலை கொள்வதன் மூலம் பொது மக்களின் அச்ச உணர்வு நீங்க வழி ஏற்படும்.

★ யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேயும் சுதந்திரமான சுதந்திர தகவல் பரிமாற்றம் இடம்பெறுவதை அரசு அதிகாரிகள் நசுக்கக்கூடாது.

★ மனித உரிமைக் கண்காணிப்புக் குழுக்களையும், தொடர்பு சாதனம் சார்ந்தோரையும் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கவேண்டும்.

★ வன்னி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அரச சார்பற்ற அமைப்புக்கள் வைத்திய, உணவு, தங்குமிட வசதிகளை வழங்குவதை அரச அதிகாரிகள் தடுத்து வருகிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவு இன்றி இருக்கும் போது அரசு உணவு விநியோகத்தில் கட்டுப்பாடு விதிக்கின்றது.

★ அங்குள்ள மக்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அப்படியானால் சர்வதேச சமூகம் அவர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும்.

★ வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் மக்களைத் தடுத்து வைத்திருப்பது நியாயமற்ற — தேவையற்ற —செயலாகும். பாதுகாப்பு அனுமதி வழங்கி, அவர்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு செல்ல அனுமதிக்கவேண்டும். அவர்கள் இலங்கைப் பிரஜைகளே 'கிரிமினல்கள்' அல்லர்.

★ இந்தியாவுக்கு அகதிகள் செல்வதை இலங்கை அரசு தடுக்கக்கூடாது. இந்திய அரசு அவர்களுக்கு தொடர்ந்து புகலிடம் வழங்க வேண்டும்.

—என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

## திருமலையில் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 17

திருகோணமலை சீனக்குடா விமானப்படை முகாமில் தொழிலாளியாகப் பணியாற்றிய ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

கடந்த 5 ஆம் திகதி சீனக்குடா விமானப்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என இலங்கை வானொலி குறிப்பிட்டது.

(உ-3-150)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தி வரும் பல்வேறு நிகழ்வுகளில் மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாக இன்று வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கருத்தரங்குத் தொடர் இடம்பெறும். 'மகளிர் திறமையை மதித்தல்' என்ற தலைப்பில் நவநீதம் ஜெகதீசன் உரையாற்றுவார்.

வளர்மதி சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கு நிவாரண உதவியும் வழங்கப்படும்.

(உ)

## ஐ.தே.கவின் தேர்தல் முகவர்களை தாக்குவதற்கு அரசாங்கம் திட்டம்

### ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

''எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின்போது ஐ தே. கட்சி சார்பில் வாக்களிப்பு— நிலையங்களில் பணியாற்றும் முகவர்களைத் தாக்குவதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டி வருவது குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன.''

இப்படி ஐ. தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றஞ்சாட்டினார்.

எனவே பாதுகாப்பை பலப்படுத்துமாறு தாம் தேர்தல் ஆணையாளருக்கு கோரிக்கைவிட உள்ளதாகவும் ரணில் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்கு உள்ளூர் தேர்தல் அவதானிகள் பலருக்கு இருந்த வாய்ப்பை அமெரிக்க தேர்தல் கண்காணிப்பாளர்களின் விசா அனுமதியைத் தாமதப்படுத்தியதன் மூலம் அரசு இல்லாமற் செய்துள்ளது எனவும் ரணில் குற்றஞ்சாட்டினார்.

(இ-10)

## யாழ். ஆஸ்பத்திரியில்

## பிரசவ விடுதிக்குச் செல்லும் நடைபாதையின் அவல நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். ஆஸ்பத்திரியில் பிரவச விடுதிக்குச் செல்லும் நடைபாதை சமதரையைக் கொண்டிராமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இவ்வழியாக வார்ட்டுக்கு ஸ்ரெச்சர்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் மூலம் கொண்டு செல்லப்படும் கர்ப்பிணிகள் இதனால் பெரும் வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

ஸ்ரெச்சர்கள் குலுங்கி, இடறி சில சமயங்களில் சக்கரங்கள் உடைந்து போகும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரியில் நாளாந்தம் சராசரி 25 பெண்கள் பிரசவத்துக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களில் சராசரி இரண்டு பேருக்கு நாளாந்தம் சத்திர சிகிச்சையும் இடம்பெறுகிறது. சத்திர சிகிச்சைக் களத்தில் இருந்து இந்த நடைபாதை வழியாகவே நோயாளிகள் பிரசவ விடுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். அவ் வேளைகளில் அவர்கள் பெரும் வேதனையை அனுபவிக்க நேரிடுகிறது.

இதேவேளை — இந்த நடைபாதையின் மேற்பகுதி கூரை எதுவும் இன்றி [illegible] வெளியாகவே உள்ளது. ஐந்து மாடிக் கட்டடத்தில் [illegible] பிரசவ விடுதிக்கு வெயிலில் காய்ந்தவாறே நோயாளிகள் செல்ல வேண்டி உள்ளது. (ஐ-15)

## வளைகுடா யுத்தம்

## 6 ஆயிரம் இலங்கையர்களுக்கு தலா 2,500 டொலர் நஷ்டஈடு

கொழும்பு, மார்ச் 16

1990 வளைகுடா யுத்தத்தின் போது குவைத்தில் பணிபுரிந்த பல்லாயிரக் கணக்கானோர் தங்கள் தொழில்களையும் சொத்துக்களையும் இழந்து சொந்த நாடுகளுக்குத் திரும்ப நேரிட்டது.

பல்வேறு இன்னல்களுக்கு உள்ளான 63 நாடுகளைச் சேர்ந்த 57 ஆயிரத்து 636 பேருக்கு நஷ்டஈடாக வழங்க 7920 கோடி ரூபாவை ஐ. நா. நஷ்டஈட்டு ஆணைக்குழு ஒதுக்கி உள்ளது.

இதில் முதலாவது கட்டமாக இலங்கையைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் பேருக்கு தலா 2,500 அமெரிக்க டொலர்களை நஷ்ட ஈடாக வழங்குமாறு தமக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிமனையின் பொதுசனத் தொடர்பு முகாமையாளர் குசல் பெரேரா தெரிவித்துள்ளார்.

வளைகுடா போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையர் சுமார் 70 ஆயிாம் பேர் நஷ்டஈடு கோரி விண்ணப்பித்துள்ளனர் எனவும்—

அடுத்த கட்டக் கொடுப்பனவு சுமார் 10 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனை தெரிவித்துள்ளது.

(இ-10)

## தேசிய பாடசாலை முறைக்கு பதிலாக ம. ம. வித்தியாலயங்கள்

தேசிய பாடசாலை முறையை மீளமைத்து — நாடு முழுவதிலும் 300 கல்வி வலயங்களை ஏற்படுத்தி — வலயம் தோறும் மத்திய மகா வித்தியாலயம் என்ற அடிப்படையில் 300 மத்திய மகா வித்தியாலயங்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவின் சிபார்சுக்கமைய —

தற்போது நடைமுறையில் உள்ள தேசிய பாடசாலை முறைக்குப் பதிலாக— பூரண வசதிகள் கொண்ட —மத்திய மகா வித்தியாலயங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-3)

## நாளை

**பங்குனி 5**

**செவ்வாய்க்கிழமை**

திதி: தசமி பின்இரவு 01-12 வரை.

நட்சத்திரம்: புநர்பூசம் முன் இரவு 10.55 வரை.

சுபநேரம்: 10.49-12.19

ராகுகாலம்: 03.19- 4.49

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## அனுராவின் மனு நாளை நீதிமன்றில்!

கொழும்பு, மார்ச் 17

தமது வீட்டைச் சோதனை செய்ததைக் கண்டித்து ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனுராபண்டார நாயக்க உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு நாளை உயர் நீதிமன்றத்தில் எடுக்கப்படவிருக்கின்றது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா, இல்லையா என்பதுதொடர்பாகநாளைய தினம் முடிவு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'வாரண்ட்' உத்தரவு இன்றி தமது வீட்டைச் சோதனையிட்டதை ஆட்சேபித்து — பொலீஸாருக்கும், இரகசியப் பொலீஸாருக்கும் எதிராக — இரண்டரைக் கோடி ரூபா நஷ்டஈடு கோரி அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை அனுரா தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் தேர்தல்

# பாதுகாப்புக்கு விசேட திட்டம்!

கொழும்பு, மார்ச் 17

எதிர்வரும் வெள்ளிக்கிழமை உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதை ஒட்டிப் பாரிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எல்லைக் கிராமங்களில் இராணுவ - பொலீஸ் கூட்டு ரோந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் தேவை ஏற்படும் பட்சத்தில் சேவையில் ஈடுபடுத்த மேலதிக துருப்புக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி றோகான் தளுவத்த தெரிவித்தார்.

கடற்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஓர் இடத்தில் ஒரு சம்பவம் நடந்ததாகத் தகவல் வந்தால் ஒரு மணித்தியாலத்துக்குள் அந்த இடத்துக்கு விரையக்கூடிய வகையில் முப்படையினர் அங்கம் வகிக்கும் விசேட குழுக்கள் ஆங்காங்கே தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-3-150)

# துறைமுகத்திலும் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகள் கொழும்பு துறைமுகத்துக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தலாம் எனக் கருதப்படுவதால் துறைமுகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடற்படையினர் துறைமுகம் மற்றும் அண்டிய கடற்கரைப்பகுதிகள் ஆகியவற்றின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகள் கொழும்பிற்குள் ஊடுருவியிருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த ஏற்பாடு எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ- 3- 150)

# பொ.ஐ.முன்னணியே இதிலும் முன்னணி!

கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சித் தேர்தல் வன்செயல்கள் தொடர்பான போட்டியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே வெற்றி பெற்றுள்ளது என்று கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன!

தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டி அதிகரித்துவரும் வன்செயல் சம்பவங்கள் குறித்து கடந்த ஆறாம் திகதிக்கும் 12 ஆம் திகதிக்கும் இடையில் கணிப்பீடு ஒன்று நடத்தப்பட்டது.

இக்கணிப்பீட்டில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் 412 வன் முறைகளும், ஐ.தே.க. சார்பாக 233 வன்முறைகளும் இடம்பெற்றதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாம்.

(உ-3-150)

# 26,313 வாக்குகள் செல்லுபடியற்றவை

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குகளில் 26 ஆயிரத்து 313 வாக்குகள் செல்லுபடியற்றவை என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

மொத்தம் ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 78 தபால் வாக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றில் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 765 வாக்குகள் மட்டுமே செல்லுபடியானவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-150)

# மூன்று இளைஞர்கள் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 17

குப்பிளானிலும் கோண்டாவிலிலும் நேற்றும் நேற்று முன்தினம் மாலையும் இடம்பெற்ற இரண்டு சூட்டுச் சம்பவங்களில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இந்த இளைஞர்கள் மூவரினதும் சடலங்கள் நேற்று சுன்னாகம் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

பொதுமக்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் மூன்று விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கோண்டாவிலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சம்பவத்தில் ஓர் இளைஞர் உயிரிழந்தார். அவரின் கழுத்திலும் ஏனைய இடங்களிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

அந்தச் சம்பவத்தில் இரண்டு பொதுமக்கள் இடையில் சிக்கி காயமடைந்ததாகவும் —

அவர்கள் உடனடியாக பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் —

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கணபதி நடராசா (வயது 51), க. மாணிக்கம் (வயது 75) ஆகிய இருவருமே காயமுற்றனர்.

அவர்களில் நடராசா என்பவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தலையில் படுகாயமுற்ற மாணிக்கம் என்பவர் மேலதிக — அவசர — சிகிச்சைக்காக பலாலி இராணுவ ஆஸ்பத்திரியிலிருந்து கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று குப்பிளானில் இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவர் தலை சிதறி உயிரிழந்தார். மற்றொருவர் சயனைட் உட்கொண்டு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு சம்பவங்களிலும் உயிரிழந்த மூவரினதும் சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (உ-5-15)

எடிபல இராணுவ நடவடிக்கையை அடுத்து

# மன்னாரில் 75 சதவீத வயல்களில் நெல் அறுவடை செய்யமுடியாத நிலை

கொழும்பு, மார்ச் 17

வவுனியா — மன்னார்ப் பாதையை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'எடிபல' இராணுவ நடவடிக்கையை அடுத்து மன்னார் மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் செய்கை பண்ண முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா - மன்னார் வீதியில் வடக்குப் புறமாக அமைந்த வயல்களுக்குச் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் —

தெற்குப் புறமாக உள்ள வயல்களில் மட்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு விவசாயிகளுக்குக் கூறப்பட்டிருப்பதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இதனால் சுமார் 750 ஏக்கர் நிலத்தை முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இம்மாத இறுதிக்குள் இப்பகுதியில் உள்ள 75 சதவீதமான வயல்கள் அறுவடைக்குத் தயாராகிவிடும். ஆனால் அநேகமான விவசாயிகள் இன்னும் தங்களது வயல் நிலங்களை எட்டியும் பார்க்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுக்கரைக் குளத்தில் இருந்து தாராளமாகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மக்கள் இடம்பெயர்ந்து சென்றதை அடுத்து ஆடு மாடுகள் போன்ற கால்நடைகள் வயல்களைப் பதம் பார்த்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## வானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்

விமானச் சிதைவுகள் வீழ்ந்த இடத்துக்குப் பின்னர் விரைந்து சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று 'புக்காரா' விமானத்தின் விமானியைக் கொழும்புக்கு ஏற்றி வந்தது.

மட்டக்களப்பு வாகரையில் உள்ள விடுதலைப் புலிகளின் தளங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக அநுராதபுரத்திலிருந்து விரைந்து கொண்டிருந்த சமயமே 'புக்காரா' விமானம் வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்பட்டது.

விமானத்தின் சிதைவுகள் பொலன்னறுவையில் உள்ள ஹெலதுன்ன குளக்கட்டின் வடக்குப் பகுதியில் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன.

கொழும்பில் உள்ள விமானப்படைத் தலைமை அலுவலகத்தில் இருந்து விசேட அதிகாரிகள் குழு ஒன்று இச்சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக நேற்றே பொலன்னறுவைக்கு விரைந்தது.

விமானம் வெடித்துச் சிதறியதற்கான காரணம் எதுவும் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

எனினும் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அல்லது புலிகளின் தாக்குதல் காரணமாக விமானம் வானத்தில் வெடித்துச் சிதறியிருக்கலாம் எனக் கருதப்பட்டது. (உ-ஐ-3-5)

## பொ. ஐ. மு...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரசார நடவடிக்கைகளில் அமைச்சர் சி.வி.குணரத்தினவுடன் இணைந்து செயற்படுமாறும்—

பொ. ஐ. முன்னணியின் பிரசார மேடையில் பேசுமாறும்—

அமைச்சர் ஸ்ரீமானியை கடிதம் மூலம் பொ. ஐ. முன்னணி கோரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் அம்மேடைகளில் ஏறிப் பிரசாரம் செய்யாது விட்டால் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்குவது என அரசு முடிவு செய்துள்ளதாம்.

ஸ்ரீமானி அத்துலத்முதலியின் கட்சியினர் இது விடயமாகக் கருத்து வெளியிடுகையில் —

''ஸ்ரீமானி அத்துலத்முதலி பொ. ஐ. முன்னணியின் மேடைகளில் தற்போதைக்குப் பேசமாட்டார்''—என்று தெரிவித்தனர்.

அமைச்சரவை மாற்றத்தின் போது மஹிந்த ராஜபக்ஷ, தர்மசிறிசேனநாயக்க, பௌசி ஆகியோருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகள் மாற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3-150)

பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்
25,றக்காவீதி, யாழ்ப்பாணம்.
Spoken English
With
Grammar
by:-
BRITTO
ஆரம்பம்: 18 - 03 - 97
பி. ப. 6-30 மணி
(45830)

## பாஸ்கரலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்திருந்தாலும் —

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது இயலாத காரியம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (உ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

நவம்பர் இறுதியில் அரசாங்கம் அறிவித்ததும்—

பின்னர் தமிழ்க் கட்சிகளின் ஆட்சேபனை காரணமாக மூன்று மாதங்களுக்கு இத்தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுவதாக கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதும் —தெரிந்தவையே.

தற்போது மூன்று மாதம் கடந்த நிலையில், மேலும் மூன்றரை மாதங்களுக்கு தேர்தல்கள் தள்ளிவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (உ-3)

## ஈ. பி. டி. பி. ஆறுதல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

மருதங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் பயணிகள் பஸ்ஸில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு தமது அனுதாபங்களையும், காயமுற்றோருக்கு ஆறுதலையும் தெரிவித்து ஈ. பி. டி. பியின் யாழ். அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

அப்பாவிப் பொதுமக்களை பாதிக்கும் இத்தகைய தாக்குதலை தாங்கள் கண்டிப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(உ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 1909-11-10

மறைவு: 1997-02-15

அமரர் கந்தையா நமசிவாயம்
(புராணிகர், மீசாலை.)

பாசமுடன் பெற்று பகல் இரவாய்ப் பாடுபட்டு
பார் புகழ அனைவரையும் பல்கலை செல்லவைத்து
புராணங்கள் பல பாடி புராணிகர் பட்டம் பெற்று
நல்லை ஆதீனமும் நல்கியது பரிசு பல
நாள்கள் தான் நகர்ந்தாலும்,
உங்கள் நினைவலைகள் மறைந்திடுமா?

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று (17-3-97) திங்கட்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அவரது கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்.

க. யோகாம்பிகை
மீசாலை கிழக்கு, மீசாலை.

(மைத்துனர்-வேலுப்பிள்ளை)
(45843)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-03-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org